செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

பாரத மொழிகளின் திருவிழா
(28.09.2023-11.12.2023)
"மொழிகள் பல; உணர்வு ஒன்றே"

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

நடத்தும்

# ஒப்புநோக்கில் தமிழ்ச் செவ்விலக்கியங்கள்

## (Ancient Tamil Classics from Comparative Perspectives)

## புத்தொளிப் பயிற்சி வகுப்பு - 02

## (Refresher Course)

**(29.11.2023 – 12.12.2023)**

## <u>அறிவிப்பும் அழைப்பும்</u>

இருபதாம் நூற்றாண்டில் தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் நன்கு அறிமுகமான பிறகே செம்மொழித் தமிழின் பெருமை உலக அறிஞர்களின் பார்வையைக் கவர்ந்தது. ஏ. கே. இராமானுசன் "பத்துப்பாட்டையும் எட்டுத்தொகையையும் ஒத்த போரையும் காதலையும்பற்றி நாடகத் தற்கூற்றுப்பாக்களைக்கொண்ட தொகை நூல்களை, வேறு எந்த மொழியிலும் காண இயலாது" என்ற கருத்தை முன்வைத்தார்.

வடமொழிப் பேராசிரியர் கே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தமது காளிதாசனைப் பற்றிய நூலில் "பிராகிருத, வடமொழிக் காப்பியங்கள் கவிதை உத்திகளுக்கு மட்டுமல்லாமல் யாப்பு வகைகளுக்கும் சங்க இலக்கியங்களுக்குக் கடன்பட்டிருக்கின்றன" என்று ஒப்புநோக்கில் வெளிப்படுத்தினார்.

செம்மொழிக்குரிய தகுதிகளையெல்லாம் பட்டியலிட்டு அவையெல்லாம் தமிழுக்கிருப்பதால் அதனைச் செம்மொழி என்று இந்திய அரசு அறிவிக்க வேண்டுமென்று வலியுறுத்திய ஜார்ஜ் ஹார்ட், செம்மொழித் தமிழ்பற்றியும் தமிழில் உள்ள செவ்விலக்கியங்கள்பற்றியும் தொடர்ந்து எழுதினார். தமிழ், சமஸ்கிருத இலக்கியங்களின் தரம்பற்றியும் அவற்றிற்கிடையே நிகழ்ந்த கொள்ளல், கொடுத்தல்பற்றியும் சமஸ்கிருதப் பேராசிரியரும் கிரேக்கம், இலத்தீன், எபிரேயம், தமிழ், சமற்கிருதம் ஆகிய ஐந்து செவ்வியல்மொழி இலக்கியங்களையும் முறையாகப் பயின்றவருமாகிய ஜார்ஜ் ஹார்ட் கூறும் கருத்துகள் செம்மொழித் தமிழின் உண்மையான சிறப்பை ஒப்பீட்டு முறையில் உலகிற்கு உணர்த்தின.

உலக மொழிகளில் இன்றுவரை நமக்குக் கிடைத்துள்ள இலக்கண, மொழியியல் நூல்களில் காலத்தால் முதன்மையானதும் பொருண்மையால் முழுமையானதும் தொல்காப்பியம் ஆகும். கிரேக்க, ரோமானிய, எபிரேய, ஆரிய இனங்கள் படைத்த தொன்மையான இலக்கண நூல்களெல்லாம் காலத்தால் தொல்காப்பியத்திற்குப் பிந்தியவை என்பதை அண்மைக்கால ஒப்புநோக்கு ஆய்வுகள் உறுதிசெய்துள்ளன.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய எல்லாக் கூறுகள்பற்றியும், பேச்சுவழக்கிலிருந்து உயர்தர இலக்கியவழக்குவரையிலான மொழியின் எல்லா நிலைகள்பற்றியும் விரிவாகவும் ஆழமாகவும் ஆராய்வது. பிற செம்மொழி இலக்கண நூல்களெல்லாம் ஏதோ ஓரிரு கூறுகள்பற்றியும் ஓரிரு வழக்குகள்பற்றியும் மட்டுமே பேசுபவை. அந்நூல்கள் யாவும் அவ்வம்மொழிபற்றி மட்டுமே ஆராய்பவை. தொல்காப்பியமோ எல்லா மொழிகளுக்கும் பொருந்தும் இலக்கணத்தையும் எல்லா இனங்களுக்கும் ஏற்புடைய வாழ்வியலையும் புலப்படுத்துவது என்ற முடிவுகளும் முன்வைக்கப்படுகின்றன.

தமிழ்ச் செவ்விலக்கியங்களின் சிறப்புகள், ஒப்புநோக்கில் ஆராய முற்படுகின்றபோதுதான் அதன் சிறப்புகளும், தனித்தன்மைகளும் உலகப் பார்வைக்குப் துலக்கமாகப் புலப்படும். இந்நோக்கத்தின் ஒருபகுதியாகவே, உலக மொழிகளிலெல்லாம் செம்மொழித் தமிழ் நூல்களை மொழிபெயர்த்து வெளியிடும் பணியைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

ஒப்புநோக்கில் செம்மொழித் தமிழின் சிறப்புகளைத் தமிழியல் பேராசிரியர்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற நோக்கில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் **‘ஒப்புநோக்கில் தமிழ்ச் செவ்விலக்கியங்கள்’** என்ற தலைப்பிலான புத்தொளிப் பயிற்சி வகுப்பினை நடத்தவுள்ளது.

கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பயன்பெறும் வகையில் நடத்தப்பெறும் இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பில் ஒப்பில் ஆய்வில் புலமை பெற்ற வல்லுநர்கள் பயிற்சி அளிக்க உள்ளனர். தமிழியல் ஆய்வுக் களத்தை வளப்படுத்தப்படவுள்ள மாணவர்களை வளர்த்தெடுக்கும் ஆசிரியர்கள் இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழி நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பு 29.11.2023 முதல் 12.12.2023ஆம் நாள்வரை நடைபெறவுள்ளது. இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பின் விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. புத்தொளிப் பயிற்சி வகுப்பு நடைபெறும் நாட்கள்: 29.11.2023 – 12.12.2023 (14 நாட்கள்; ஞாயிறு நீங்கலாக)
2. புத்தொளிப் பயிற்சி வகுப்பு நடைபெறும் நேரம்: 10.00 - 01.00 & 02.00 - 05.00.
3. புத்தொளிப் பயிற்சி வகுப்பிற்குக் கட்டணம் ஏதும் இல்லை.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குத் தங்குவதற்குரிய கட்டணமும், பயணப் படியும் மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. புத்தொளிப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து refreshercourse@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்புத்தொளிப் பயிற்சி வகுப்புப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல்மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக்கொண்டும் தொலைபேசி/ அலைபேசிவழியாகத் தொடர்புகொள்ளக் கூடாது.
8. விண்ணப்பம் உரிய வழியாக வரப்பெற வேண்டும்.
9. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/புலனம்வழியாக மட்டுமே அழைப்பாணை அனுப்பிவைக்கப்படும்.
10. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 24.11.2023. இதற்குப் பிறகு வரும் விண்ணப்பம் எக்காரணத்தைக்கொண்டும் ஏற்கப்படமாட்டாது.
11. இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பில் அனைத்து அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுகளுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் அல்லது இடைநிற்றல் இருப்பின் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.
12. இப்புத்தொளிப் பயிற்சி வகுப்பில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 24.11.2023 அன்று மின்னஞ்சல்/புலனம்வழியாகத் தகவல் தெரிவிக்கப்படும்.
13. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)

செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100

# CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)

Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

सत्यमेव जयते

## ஒப்புநோக்கில் தமிழ்ச் செவ்விலக்கியங்கள்

(Ancient Tamil Classics from Comparative Perspectives)

## புத்தொளிப் பயிற்சி வகுப்பு - 02

(Refresher Course)

(29.11.2023 – 12.12.2023)

நிழற்படம்

**விண்ணப்பப் படிவம்**

**(Application Form)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர்<br>Name (in Block Letters) | தமிழ் | | | | | |
| | | ஆங்கிலம் | | | | | |
| 2. | பதவி மற்றும் துறை<br>Designation and Department | | | | | | |
| 3. | கல்வித் தகுதிகள்<br>Academic Qualifications | | | | | | |
| 4. | பல்கலைக்கழகம்/கல்லூரி/நிறுவனத்தின் பெயர் & முகவரி<br>அ) தொலைபேசி எண்<br>ஆ) மின்னஞ்சல் முகவரி<br>Name and address of the College/ University /Institution<br>a) College phone number with STD code<br>b) College e-mail ID | | | | | | |
| 5. | கல்லூரி/பல்கலைக்கழகம்/நிறுவனத்தின் வகை<br>Type of College/University/Institution (✓) | அரசு/அரசு உதவி/தன்னாட்சி/ சுயநிதி<br>Government/Government Aided/Autonomous/ Self-finance | | | | | |
| 6. | பாலினம் (✓)<br>Sex | ஆண்<br>Male | | பெண்<br>Female | | திருநங்கை<br>(Third Gender) | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7. | வயது & பிறந்தநாள்<br>Age & Date of Birth | | | | | | |
| 8. | வகுப்பு (✓)<br>Community | பொது<br>(G) | | இ.பி.வ.<br>(O.B.C.) | | பட்டியல் இனத்தவர்<br>(SC) | |
| 9. | மதம்<br>Religion | | | | | | |
| 10. | சிறுபான்மையினர் தகுதிநிலை<br>Minority Status (✓) | ஆம்/இல்லை<br>Yes/No | | | | | |
| 11. | நிரந்தர நியமனம் பெற்ற நாள்<br>Date of Permanent Appointment | | | | | | |
| 12. | நிரந்தர நியமனம்பெற்ற நாளிலிருந்து ஆசிரியர் பணி அனுபவம் எத்தனை ஆண்டுகள்?<br>Total Years of Teaching Experience from the date of **permanent appointment?** | ஆண்டுகள்………. மாதங்கள்…………<br>Years…….. Months …….. | | | | | |
| 13. | இல்ல முகவரி<br>(தொலைபேசி/மின்னஞ்சல் முகவரியுடன்)<br>Residential Address<br>(With Phone No & e-mail ID) | | | | | | |
| 14. | புலன எண்<br>WhatsApp number | | | | | | |
| 15. | செம்மொழி நிறுவனம் முந்தைய கல்வியாண்டுகளில் நடத்திய பயிலரங்குகளில் கலந்துகொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக<br>Did you attend the workshop conducted by the CICT in previous academic years? If yes, please give details | ஆம்/yes | | இல்லை/No | | | |

மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் சரிபார்க்கப்பட்டு உண்மையானவை என்று உறுதியளிக்கிறேன். மேலும் செம்மொழி நிறுவன விதிமுறைகளுக்கு நான் கட்டுப்படுவேன்.

(The details given above were verified and found to be correct. I will abide by the rules and regulations of the CICT)

நாள் : (கையொப்பம்)

இடம்:

## சான்றிதழ் (Certificate)

1. மேலே உள்ள தகவல்கள் எங்களுக்குத் தெரிந்தவரை சரியானவை என்று சான்றளிக்கப்படுகிறது.
   (Certified that the above informations is correct to the best of our knowledge)
2. பல்கலைக்கழக மானியக் குழுச் சட்டம் 1956, பிரிவு 2(f)/12Bஇன்கீழ் எங்கள் கல்லூரி/பல்கலைக்கழகம் சேர்க்கப்பட்டுள்ளது என்று சான்றளிக்கப்படுகிறது.
   (Certified that our College/University is included in the list of Colleges under Sec. 2(f)/ 12B of the UGC Act 1956)
3. விண்ணப்பதாரர் நிரந்தர/சுயநிதி ஆசிரியர் என்றும், தேர்வுசெய்யப்பட்டால் திட்டம்/ பாடநெறியிலிருந்து விடுவிக்கப்படுவார் என்றும் சான்றளிக்கப்படுகிறது.
   (Certified that the applicant is a permanent / self finance teacher and will be relieved for the Programme/Course if selected)

| | |
|---|---|
| அலுவலக உதவியாளர் | அலுவலகக் கண்காணிப்பாளர் |
| (Office Assistant) | (Office Superintendent) |

**பதிவாளர் / முதல்வரின் உறுதிமொழி**

**(Declaration by the Registrar / Principal)**

………………………………………………………………………………………………

………………………….. (பெயர்/பதவி) அவர்களைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 29.11.2023 முதல் 12.12.2023 வரை நடத்துகின்ற புத்தொளிப் பயிற்சி வகுப்பில் பங்கேற்க விடுவித்தனுப்புவேன் எனச் சான்றளிக்கிறேன்.

(I certify that I will relieve ……………………………… ……………… ………………… …………………………… (Name/ Designation & Department) to attend the Refresher Course conducted by Central Institute of Classical Tamil from 29.11.2023 to 12.12.2023)

**உரிய முத்திரையுடன் பதிவாளர்/முதல்வரின் கையொப்பம்**

**(Signature of the Registrar/Principal with Seal)**